# உன்னத கீதங்கள்

''நான் உயிரோடு இருக்குமட்டும் என் கர்த்தரைப் பாடுவேன்
நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்
நான் அவரைத் தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும்
நான் கர்த்தருக்குள் மகிழ்வேன்'' சங். 104:33,34

''நான் ஆவியோடும் பாடுவேன். கருத்தோடும் பாடுவேன்.''
1 கொரி. 14:15

தேவனுடைய நாமம் ஒன்றே மகிமைப்பட
நாம் ஆவியோடும் பாடுவோம் கருத்தோடும் பாடுவோம்.

இயற்றியோன் :
பாஸ்டர் S. கனகசுந்தரம்,
உன்னத சபை, வேலூர் - 632 006.

விபரங்கட்கு : 115, மின்நகர், வேலூர் - 632 006.

இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும்
நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது.
வெளி. 19:1

# அட்டவணை


| | | பாட்டு எண் |
|---|---|---|
| 1. | அழைக்கிறார் அழைக்கிறார் | 12 |
| 2. | இந்த ஸ்தலத்தில் செய்யப்படும் | 27 |
| 3. | இயேசு வருகிறார் | 42 |
| 4. | இயேசுவின் நாமம் | 23 |
| 5. | இயேசுவே எந்தன் | 41 |
| 6. | இயேசுவே பாவ பலியாக | 32 |
| 7. | இரத்தம் வடியும் | 36 |
| 8. | இரத்தத்தினால் என்னை மீட்டார் | 2 |
| 9. | இராஜாதி இராஜன் இயேசு | 19 |
| 10. | இராஜாதி இராஜன் தேவாதி தேவன் | 26 |
| 11. | இன்ப நாமமே இயேசு நாமம் | 30 |
| 12. | உயிர்த்தெழுந்தார் இயேசு | 39 |
| 13. | உன்தேவனை சந்திக்க ஆயத்தமா | 24 |
| 14. | எந்தன் இயேசு வசனம் தந்தார் | 21 |
| 15. | எழும்பி பிரகாசி | 38 |
| 16. | என் ஆத்துமாவே என்னுள்ளமே | 5 |
| 17. | என் தேவனே என் தேவனே | 37 |
| 18. | என்னை மீட்கவே | 15 |
| 19. | கல் வாரி பாதையிலே | 17 |
| 20. | காயப்பட்ட கரத்தினால் | 34 |
| 21. | காலையும் மாலையும் தேடினேன் | 9 |
| 22. | குருதி வடியுதே | 20 |
| 23. | சுவிசேஷம் உறைப்பேன் | 13 |
| 24. | தூக்கி சுமக்கும் தோளினிலே | 22 |
| 25. | தொங்கினார் தொங்கினார் | 3 |
| 26. | தேற்றரவாளனே | 35 |
| 27. | தோற்றுப்போன சாத்தானே | 10 |
| 28. | நமக்கொரு பாலகன் | 4 |
| 29. | நான் பாவியான மனிதன் | 33 |
| 30. | நீதிமானை நோக்கிடும் தேவா | 8 |
| 31. | நேசரைப் பாடிட | 29 |

32. பாவத்தின் சம்பளம் 11
33. பாவி என் நெஞ்சம் 6
34. பாவி என்னை மீட்கவேண்டும் 16
35. பாவி என்னை மீட்கவே 40
36. பாவியை மீட்கவே 29
37. பிறந்தாரே இயேசுராஜன் 7
38. புது ஆண்டில் புது ஜீவன் 31
39. பேரின்ப நதியே 25
40. மகிதளம் மகிழ்ந்து பாடிட 14
41. மேகமீதில் இயேசுராஜன் 1
42. விண்ணவர் வந்திடும் நேரம் 18

## 1

மேகமீதில் இயேசுராஜன் வேகமாய் வந்திடுவார்
கண்கள் யாவும் அவரைக்காணும் கர்த்தர் வந்திடுவார்

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா.

1. ஆயிரமாயிரம் தூதருடன்
ஆண்டவர் வந்திடுவார்
எக்காள சத்தம் வானில் தொனிக்கும்
என் இயேசு வந்திடுவார்.

ஆயத்தமா ? ஆயத்தமா ?
அவரை சந்திக்க ஆயத்தமா ?
அல்லேலூயா அல்லேலூயா
ஆமேன் அலலேலூயா ?

2. வானிலே பறந்துபோகும்போது
வானத்தில் யுத்தம் உண்டு
பரமசேனை யுத்தம் நடத்தும்
சாத்தான் தோற்றுப்போவான்.

3. ஆண்டவர் இயேசு வரும்போது
ஆகாயம் வீடாகும்
நியாயத் தீர்ப்பு செய்திடும் கர்த்தர்
நம்மை அழைப்பாரே.

4. ஆயிரம் வருஷம் ஆட்சிசெய்ய
ஆண்டவர் வந்திடுவார்
கர்த்தரின் சேனையே கைக்கொட்டி பாடிடு
கர்த்தர் வந்திடுவார்.

## 2

இரத்தத்தினால் என்னை மீட்டார்
இரட்சகர் இயேசு நடத்திடுவார்.

ஆனந்தமே பேரானந்தமே
ஆண்டவர் இயேசு நடத்திடுவா
அல்லேலூயா ஜெயம் அல்லே
ஆனந்த கீதங்கள் பாடிடுவே

1. அக்கினி ஊடாக நீ நடந்தாலும்
அலைகடல் தன்னை கடந்தாலும்
அழியா ஜீவனை அளித்தவரே
அனுதினம் காத்து நடத்திடுவார்.

2. கண்மணிப்போல் என்னை காப்பவரே
கைகளில் ஏந்தி நடத்திடுவார்
கருத்தாய் என்னை காப்பவரே
கடைசி மட்டும் கைவிடமாட்டார். —இரத்த

3. துன்பமில்லை இனி துயரமில்லை
கண்ணீரில்லை மனக் கலக்கமில்லை
37. ஆண்டவர் என்னை மீட்டுக்கொண்டார்
38. பூவினியில் எந்நாளும் சந்தோஷமே. —இரத்த

39. பேரின்பர் சேனைகள் பாடிடவே
40. மகிதளில் ஜெயதொனி முழங்கிடுதே
என்னை நடத்திடுவார்
41. மேகமீதில்
எந்நாளும் சந்தோஷமே. —இரத்த
42. விண்ணவர்
சாயலை நான் பெற்றிடுவேன்
பறந்திடுவேன்
வரும்போது
கீதங்கள் பாடிடுவேன். —இரத்த

## 3

தொங்கினார் தொங்கினார் என்மீட்பர் தொங்கினாரே
கல்வாரியில் என்னை மீட்கவே என் இயேசு தொங்கினாரே

முடியை சூட்டியே
மை சிலுவையில் ஏற்றியே
ட்டியால் குத்தவே இரத்தம் நீரும் வடியுதே
யேசுவே இயேசுவே என்பாவம் போக்கவே. —தொங்கினார்

ன் இரட்சகர் விலாவிலே
தா இரத்தமும் வடியுதே
சுவே இயேசுவே எந்தன் நேசரசுவே
ன் கண்டேன் ஐங்காயங்களைக் கண்டேன்.
—தொங்கினார்

கம் தீர்க்கவே
ால் துடித்தீரே
வனே எங்கள் தேவாதி தேவனே
த்தீர் பெரும் வாதையால் துடித்தீர்
—தொங்கினார்

ரிலே
ந்தீரே
என்னை மீட்க வந்தவரே
ாசிலுவையை சுமந்தீர். —தொங்கினார்

5. எந்தன் உள்ளம் நடுங்கிடுதே
எந்தன் நெஞ்சம் கலங்கிடுதே
நேசரே நேசரே எந்தன் நேசரேசுவே
தந்தேன் தந்தேன் என்னை தந்தேன் உந்தனுக்கே
—தொங்கினார்

## 4

நமக்கொரு பாலகன் பிறந்தார்
நமக்கொரு குமாரன் கொடுக்கப்பட்டார்
அவர் நாமம் வல்லமை உள்ளது.

1. தூதனானவர் அவரே
தேவதூதருடன் வந்தவரே
ஈசாக்கின் தேவனும்
அவரே
யாக்கோபின் தேவனும்
அவரே

2. சர்வமும் படைத்தவர் அவரே
சர்வ வல்லமையுள்ளவர்
அவரே
யெகோவா தேவனும்
அவரே
அதிசயமானவர் அவரே.

3. ஆமேன் என்பவரவரே
அல்பாவும் ஒமேகாவும்
அவரே
ஆதியும் அந்தமும் அவரே
ஆலோசனை கர்த்தரவரே.

4. நித்திய பிதாவும் அவரே
வழிசத்தியம் ஜீவனும்
அவரே
கர்த்தரும் மீட்பரும் அவரே
நம்மை இரட்சிக்கும்
தேவனும் அவரே.

5. சாரோனின் ரோஜாவும்
அவரே
சாலேமின் ராஜனும் அவரே
நீதியின் இராஜனும் அவரே
இராஜாதி இராஜனும்
அவரே

6. இருக்கிறவராகவே
இருப்பவரே
இருக்கிறேன் என்றும்
சொலபவரே
துவக்கமும் முடிவும் அவரே
துதிகளை ஏற்பவர் அவரே.

7. உன்னதமானவர் அவரே
எனக் உறைவிடமானவர் அவரே
பரிசுத்தமானவர் அவரே
என்னை பரத்தினில் சேர்ப்பவர் அவரே

## 5

என் ஆத்துமாவே என்னுள்ளமே
கர்த்தரை துதிப்பாய் எந்நாளுமே
செய்த நன்மைகள் ஏராளமே
கர்த்தரை துதிப்பாய் என்னுள்ளமே
அல்லேலூயா துதி அல்லேலூயா
அவரை துதிப்பாய் எந்நாளுமே.

1. பாவங்களை எல்லாம் மன்னித்தாரே
நோய்களை எல்லாம் நீக்கினாரே
அழிவிலிருந்து உன்னை மீட்டு
கிருபையாக இரட்சித்தாரே. —செய்த

2. உன் வயதை பெரிதாக்கினாரே
நன்மையினால் முடி சூட்டினாரே
நியாயத்தை செய்திடும் கர்த்தரவர்
நீதியின் பாதையில் நடத்துவார். —செய்த

3. இரக்கமுள்ள கர்த்தரவர்
உருக்கம் நிறைந்த தேவனவர்
கிருபையாக மீட்டுக்கொண்டார்
சாந்தமாய் உன்னை நடத்துவார். —செய்த

4. வானத்தின் உயரம் எவ்வளவோ
கிருபை அவ்வளவுப் பெரிதே
கிழக்கு மேற்குக்கும் தூரமே
விலகும் பாவம் உன்னைவிட்டு —செய்த

5. புல்லுக்கு ஒப்பாய் உன் நாட்களை
மாற்றவும் கூடும் என்றறிவாயே
உருவம் அறிவார் இன்னதென்று
உணர்ந்துகொள்வாய் எண்ணுள்ளமே. —செய்த

## 6

பாவியின் நெஞ்சம் உருகுதே
பரமன் இயேசு மரித்ததால்
பாவி நானும் என்ன செய்வேன்
பாத்திரமாக பின் செல்லுவேன்.

1. பலத்த காளைகள் சூழ்ந்ததோ
விரிவாய் வாய்களைத் திறந்ததோ
இதயம் மெழுகாய் உருகவே
எத்தனை வார்த்தைகள் என் தேவனே —பாவி

2. கொடிய கைகள் அடித்ததோ
சிரசில் முள்முடி சூட்டினதோ
அடித்த கைகள் அத்தனையும்
சிலுவையில் எற்றி மகிழ்ந்ததோ —பாவி

3. சிவப்பு அங்கியை உடுத்தியே
சிரசில் கோலினால் அடிக்கவே
பிதாவின் சித்தமோ என் இயேசுவே
எத்தனை வாதைகள் என் தேவனே —பாவி

4. வேதனையோடு கலங்கியே
பிதாவே மன்னியும் என்றீரே
பரிந்து பேச வந்தவரே
பாரினில் எனக்காய் மரித்தீரே. —பாவி

5. தன்னையே பாவ பலியாக
எனக்காய் இயேசு கொடுத்தாரே
பாவி நானும் என்ன செய்வேன்
பாத்திரமாக பின்செல்லுவேன். —பாவி

## 7

பிறந்தாரே இயேசுராஜன்
புவியோரை மீட்டிடவே

ஏழை கோலமாய் வந்ததால்
இயேசுவை நான் துதித்திடுவேன்.

1. கந்தை பொதிந்த சேயனாய்
விந்தையில் வந்துதித்தார்
நிந்தை யாவையும் நீக்கவே
நசரேயன் இயேசு பிறந்தார். —பிறந்தாரே

2. உன்னத மகிமை தன்னை
உலகம் பெறவே பிறந்தார்
மண்ணின் சாயலை அடைந்தே
மகிபன் இயேசு பிறந்தார். —பிறந்தாரே

3. பரமன் சேனைகள் பாடிட
பரமன் இயேசு பிறந்தார்
பாரினில் சமாதானமே
பரன் அளித்திடவே பிறந்தார். —பிறந்தாரே

4. பாவக்கறைகள் நீக்கவே
பாலன் இயேசு பிறந்தார்
பாரினில் பாடுகளை
பரன் ஏற்றிடவே பிறந்தார். —பிறந்தாரே

5. மனுகுலமே மகிழ்ந்திடுவாய்
மகிபன் இயேசு பிறந்தார்
விண்ணின் மகிமை துறந்தே
மண்ணில் இயேசு பிறந்தார். —பிறந்தாரே

## 8

நீதிமானை நோக்கிடும் தேவா
பாவி என்னை நடத்திடும் ராஜா

கருணை கடலாம் தேவா
நசரேயன் இயேசுராஜா.

1. உந்தன் கிருபை பெரிதல்லவோ
உந்தன் தயவும் எனக்கில்லையோ
இளைப்பாறுதல் அடைந்திடவே
எந்தன் இருதயம் தேடிடுதே —கருணை

2. என்றும் இரக்கம் உடையவரே
மனஉருக்கம் நிறைந்தவரே
மனமடிவினை நீக்குமய்யா
மனமகிழ்ச்சியால் நிரப்புமய்யா. —கருணை

3. என்னில் சோதனை பெருகினதே
என்னை வியாதியும் தொடர்ந்திடுதே
கலவாரியின் திருரத்தமே
கனிவாய் என்னை மீட்டிடுமே. —கருணை

4. இந்த ஆலயம் உன் ஸ்தலமே
நீர் இருந்தால் பேரின்பமே
எந்தன் இயேசு அடைக்கலமே
எந்தன் ஆவிக்கும் உறைவிடமே —கருணை

5. உந்தன் பார்வையில் நானிருந்தால்
உந்தன் பாதையை தொடர்ந்திடுவேன்
பரலோகத்தின் புகலிடமே
எந்தன் இதயத்தின் பேரின்பமே. —கருணை

## 9

காலையும் மாலையும் தேடினேன்
கர்த்தரின் சமூகம் ஆனந்தமே

ஆனந்தமே ஆனந்தமே
ஆனந்தமே ஆனந்தமே

1. கர்த்தரின் வேதம் பொக்கிஷமே
காலையும் மாலையும் என் தியானமே
தேனிலும் மதுரம் வேதமே
தேடுவதால் உள்ளம் மகிழுமே. —காலையும்

2. இடைவிடாமல் ஜெபிப்பதால்
இதயம் மகிழும் எந்நாளுமே
இரக்கமுள்ளவர் இயேசுவே
இன்பம் எனக்கு எந்நாளுமே. —காலையும்

3. ஆவியுடனே பாடிடுவேன்
கருத்தாய் அவரைத் தேடிடுவேன்
அன்பரேசுவை அழைப்பதால்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே. —காலையும்

4. நேர்த்தியாய் யாவையும் படைத்தவர்
பாவியாம் என்னையும் அழைத்தவர்
காலமும் நேரமும் அறிந்தவர்
கர்த்தாவை எந்நாளும் துதிப்பேனே. —காலையும்

5. அமர்ந்த தண்ணீரில் நடத்துவார்
புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்
நன்மை கிருபை தொடரவே
நாளெல்லாம் என்னையும் தாங்கிடுவார். —காலையும்

## 10

1. தோற்றுப்போன சாத்தானே
மோசம் போக்க வந்தாலும்
சேதம் வராமல் என்னையே
காத்துக்கொள்வார் இயேசுவே.

2. தள்ளப்பட்ட சாத்தானே
தரையில் விழுந்து என்னையும்
தள்ளப்பார்த்த போதிலும்
தாங்கிக்கொள்வார் இயேசுவே.

3. பொய்யின் பிதா சாத்தானே
பொறுமையோடு வந்தாலும்
புரிந்துக்கொண்டு வாழவே
பெலனைத் தருவார் இயேசுவே.

4. மின்னலான சாத்தானே
ஒளியைத் தரித்து வந்தாலும்
பாழ்படாமல் என்னையே
பார்த்துக்கொள்வார் இயேசுவே.

5. கருநீலன் சாத்தானே
கன்னியை வைத்தபோதிலும்
கர்த்தரின் கை என்னையே
காத்துக்கொள்ளும் என்றுமே.

6. வஞ்சக ஆவி சாத்தானே
வஞ்சிக்கப் பார்த்தபோதிலும்
வல்லதேவன் இயேசுவே
வழிநடத்துவார் என்றுமே.

## 11

பாவத்தின் சம்பளம் மரணமென்றே
பாரினிலே பறை சாற்றிடுவோம்

திரும்பு மனம் திரும்பு
இரட்சண்ய நாளும் கடந்திடுதே.

1. பொல்லா உலக சிற்றின்பங்கள்
எல்லாம் அழிந்திடும் ஓர் நாளில்
பொய்யனும் உன்னை கைவிடுவான்
பொற்பரன் இயேசு வரும்போது.

திரும்பு மனம் திரும்பு
இரட்சண்ய நாளும் கடந்திடுதே.

2. இரட்சகர் இயேசு உன்னை மீட்க
இரத்தம் சிந்தி மரித்தாரே
இடைவிடாமல் அழைக்கின்ருர்
இனி என்ன தாமதம் கூறிடுவாய்.

திரும்பு மனம் திரும்பு
கிருபையின் நாட்களும் கடந்திடுதே.

3. காலமும் கடந்து சென்றிடுதே
கிருபையின் வாசலும் அடைப்படுதே
கர்த்தரே கதவை தட்டுகின்ருர்
கலக்க மென்ன ? மனத்தயக்கம் என்ன ?

திரும்பு மனம் திரும்பு
கிறிஸ்துவின் வருகை நெருங்கிடுதே.

4. தேவனின் பிள்ளைக்கு ஆனந்தமே
ஜீவனின் முடிவு பேரின்பமே
பரலோக பாக்கியம் அளித்திடவே
பொற்பரன் இயேசு அழைக்கிருரே.

திரும்பு மனம் திரும்பு
இரட்சண்ய நாளும் கடந்திடுதே.

## 12

அழைக்கிருர் அழைக்கிருர்
இயேசு உன்னை அழைக்கிருர்
விரும்பி வருந்தி அழைக்கிருர்
இரட்சகர் இயேசு அழைக்கிருர்.

1. பாடுகள் எல்லாம் நீக்கிடவே
பாசமாய் உன்னை அழைக்கிருர்
பாத்திரமாகவே மாற்றிடவே
பரமன் இயேசு அழைக்கிருர். —அழைக்கிருர்

2. இதயம் கலங்கி திகையாதே
இயேசு உன்னை அழைக்கிருர்
இனியும் தாமதம் செய்யாமல்
விரைந்து வருவாய் இந்நேரமே. —அழைக்கிருர்

3. கொடிய பாவத்தால் அழியாதே
உணர்ந்து பாவத்தை விட்டுவிடு
உன்னத தேவனை நோக்கியே பார்
விலகும் உந்தன் பாவங்களே. —அழைக்கிருர்

4. அற்பமாய் அவரை எண்ணிடாதே
அறிந்தும் அவரைத் தள்ளிடாதே
ஆபத்துக் காலமும் நெருங்குதே
அவரை நோக்கி வந்திடுவாய். —அழைக்கிருர்

5. மெல்லிய சத்தமும் கேட்கலையோ
மூடிய செவியை திறவாயோ
கடின நெஞ்சமும் மாறிடாதோ
கர்த்த ரேசுவை தேடிடாயோ. —அழைக்கிருர்

## 13

சுவிசேஷம் உறைப்பேன்
சிலுவையை சுமப்பேன்
ஜீவன் போனுலுமே
சிலுவையை நோக்குவேன்.

1. காடு மேடு கடப்பேன்
கர்த்தரை கூறிடுவேன்
கஷ்டங்கள் வந்தாலுமே
கர்த்தரை நோக்கி பார்ப்பேன். —சுவிசேஷம்

2. நாடு நகரமெல்லாம்
நடந்து திரிவதால்
நஷ்டங்கள் வந்தாலுமே
நடப்பேன் இயேசுவுக்காய் —சுவிசேஷம்

3. சத்தியம் உறைக்கவே
சாந்தமாய் நடப்பேனே
சஞ்சலம் வந்தாலுமே
சாட்சியாய் ஜீவிப்பேனே. —சுவிசேஷம்

4. உன்னதர் ஊழியமே
உலகில் உயர்ந்ததே
உண்மையாய் உழைப்பதால்
உன்னதர் மகிழ்வாரே. —சுவிசேஷம்

5. ஜீவன் சுகபெலனை
தந்தவர் காத்திடுவார்
ஜீவனுள்ள நாளெல்லாம்
ஜீவிப்பேன் இயேசுவுக்காய் —சுவிசேஷம்

## 14

மகிதளம் மகிழ்ந்து பாடிட
மன்னவன் இயேசு வந்திடுவார்.

1. மகிமை நிறைந்த சாயல் அணிவேன்
மகிபன் இயேசு வரும் நேரம்
மனம் மகிழ்ந்து பாடித்துதிப்பேன்
மணவாளன் இயேசு வரும் நேரம். —மகி

2. தூதர் சேனைகள் கூடி பாடிட
தூதனுனவர் வந்திடுவார்
துதிக்கும் சத்தமும் ஆரவாரமும்
தொனிக்கும் இயேசு வரும் நேரம். —மகி

3. பரமன் சேனைகள் பாடி மகிழ
பரமன் இயேசு வந்திடுவார்
பாடி களிக்கும் வேளை வந்தது
பாவியின் உள்ளமும் மகிழுதே. —மகி

4. நித்தமும் மகிழ்ந்து பாடி துதிப்பேன்
நித்திய பிதாவும் வரும் நேரம்
நீதி விளங்கும் நியாயம் நிலைக்கும்
இயேசு மாஇராஜன் வரும் நேரம். —மகி

5. உன்னத கீதங்கள் பாடி மகிழ
உள்ளம் களிப்பாய் துள்ளிடுதே
உறங்க மறுக்கும் இதயமடைந்தேன்
உன்னத தேவனை பாடிடவே —மகி

## 15

என்னைமீட்கவே இயேசுதன்னை கொடுத்தாரே
நான் பரிசுத்தமடைந்தேன் என்பாவம் நீங்கினதே

1. முள்முடி கிரீடம் சூட்டினதாலே
முடிந்த தென் பாவமே
மீட்பர் மரித்தார் பாவி எனக்காய்
என்பாவம் நீங்கினதே. —என்னை

2. கல்வாரி இயேசு கரத்தை நீட்டினுர்
கண்டேன் காயங்களை
கர்த்தரே மரித்தார் பாவி எனக்காய்
என்பாவம் நீங்கினதே. —என்னை

3. ஆணிகள் பாய்ந்த பாதத்தை பார்த்தேன்
அந்தோ இயேசுவே
ஆண்டவர் மரித்தார் பாவி எனக்காய்
என்பாவம் நீங்கினதே. —என்னை

4. குத்தின விலாவை நோக்கியே பார்த்தேன்
குருதி வடியுதே
குருசில் மரித்தார் பாவி எனக்காய்
என்பாவம் நீங்கினதே. —என்னை

5. இரத்தமும் நீரும் ஓடிவருவதேன்
பாவியைத் தேடியே
இரட்சகர் மரித்தார் பாவி எனக்காய்
என் பாவம் நீங்கினதே. —என்னை

## 16

பாவி என்னை மீட்கவேண்டும் என தேசையா
பரலோகபாக்யம் அருளவேண்டும் எனது மேசையா

மாற்றும் என்னை மாற்றும்
உம்மைப்போல் என்னை மாற்றும்

1. தீராத பாவத்தொல்லை எந்தன் உள்ளமே
தினமும் என்னை நெருக்கிடுதே எந்தன் ஏசையா
தேடி என்னை மீட்டுக்கொள்ளவந்த மேசையா
மூடிகிடக்கும் பாலத்தை நீர் நீக்க வாருமே. —பாவி

2. நித்தமும் என்னை வருத்தும் பாவம் நீங்கவே
சித்தம்வரை காத்திருந்தேன் என்னை மீட்கவே
சத்தமிட்டு கதறுகின்றேன் உம்மை நோக்கியே
இரத்தத்தினுல் கழுவ வாரும் எந்தன் இயேசுவே. —பாவி

3. தத்தளிப்பின் பாத்திரத்தை நீக்கவேண்டுமே
இரட்சிப்பின் பாத்திரத்தை அருளவேண்டுமே
இரத்தத்தினுல் மீட்க வந்த எந்தன் இயேசுவே
இரட்சண்ய நாள் கடக்குமுன்னே மீட்க வாருமே —பாவி

4. உருகுகின்ற உள்ளமெல்லாம் உந்தன் சொந்தமே
உத்தமனே மீட்டுக்கொண்டால் உமக்கு சொந்தமே
உடைந்துவிட்ட உள்ளமதை மீட்டுக்கொள்ளுமே
உந்தன் சேவை தினமும் செய்ய அழைத்துக்கொள்ளுமே.
—பாவி

4

இத்தரையில் என்னை நடத்தும் உந்தன் இரத்தமே
காலமெல்லாம் காத்திருப்பேன் உந்தன் சித்தமே
உலகெல்லாம் உம்மை உறைப்பேன் எந்தன் இயேசுவே
உன்னதா உந்தன் பாதம் எந்தன சொந்தமே. —பாவி

## 17

கல்வாரி பாதையிலே
கர்த்தர் இயேசுவின் பாடுகளை

கண்களில் கண்டதினல்
உள்ளம் நடுங்கிடுதே.

1. கால்கள் தள்ளாடிடுதே
கர்த்தர் கைகள் நடுங்கிடுதே
கல்வாரி நோக்கி பார்த்தே
கர்த்தர் நடப்பதென்ன?

இயேசுவே நேசரே
எந்தன் உள்ளம் நடுங்குதே. —கல்வாரி

2. நெஞ்சம் கலங்கியங்கே
நேசர் பாவியை பார்ப்பதென்ன
தஞ்சம் அளித்திடவே
என்னை அழைப்பதென்ன ?

இயேசுவே... ..

3. நீசனும் பாவி என்னை
நேசர் நேசித்த பாசத்தினல்
பாடுகள் ஏற்றுக்கொண்டே
பாரினில் தொங்கினரே.

இயேசுவே......

4. ஐயா உம் கைகளிலே
இரு ஆணிகள் பாய்ந்ததென்ன
எண்ணில்லா துன்பங்களை
எனக்காய் ஏற்றதென்ன ?

இயேசுவே... ...

5. ஈட்டியும் பாய்ந்ததினல்
எத்தன் என்னை நீர் பார்ப்பதென்ன
பரலோக பாக்கியமே
பாவிக்காய் தந்ததென்ன.

இயேசுவே......

## 18

விண்ணவர் வந்திடும் நேரம் மறுரூபமடைவேன்
மரித்தோர் உயிர்த்தெழுவார் இயேசு வரும் நேரம்.

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம்

1. ஆரவார சத்தம் கேட்கும்
ஆயத்தமுள்ளோரை சேர்க்கும்
ஆண்டவர் இயேசுவை போற்றும்
ஆனந்த கீதங்கள் பாடும். —ஆனந்தம்

2. பன்னிரு சீஷர்கள் கூட்டம்
பரமனேடு இறங்கும்
பக்தர் பலர் பலர் கூடி
பரன் இயேசுவை போற்றி பாடும். —ஆனந்தம்

3. எண்ணிலடங்காத கூட்டம்
இயேசுவின் சாயலில் இருக்கும்
சேனைகளின் கர்த்தர் இயேசு
திரள் சேனைக்கு முன்னே வருவார். —ஆனந்தம்

4. வெண்ணுடைத்தரித்த கூட்டம்
விண் தூதரோடு இறங்கும்
செட்டைகள் அடித்தே பறக்கும்
சங்கீதம் பாடியே களிக்கும். —ஆனந்தம்

5. சாத்தானை ஜெயித்த இயேசு
இராஜாதி இராஜனய் வருவார்
ஒலிவ மலையும் பிளக்கும்
கெம்பீர சத்தங்கள் முழங்கும். —ஆனந்தம்

## 19

இராஜாதி இராஜன் இயேசு நல்ல மேய்ப்பனும்
கர்த்தாதி தர்த்தரேசு எந்தன் மேய்ப்பனும்

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம்
எந்தன் மேய்ப்பர் இயேசு சொந்தமானதால்.

1. எந்தன் கர்த்தர் இயேசு நல்ல மேய்ப்பனய்
நித்தம் என்னை நடத்திட வந்ததால்
எந்தன் மேய்ப்பன் சத்தம் செவியில் கேட்குதே
அவர் ஜீவ பாதை கண்ணில் தெரியுதே. —இராஜாதி

2. எந்தன் தாகம் தீர்க்க ஜீவத்தண்ணீரும்
விண்ணில் ஜீவ ஊற்ருய் பாய்ந்து வந்திடும்
பசும் புல்லை தரும் தேவக்கரமே
இந்த மந்தை மேய்த்து என்றும் காக்குமே. —இராஜாதி

3. எந்தன் ஆத்துமாவை தேற்றும் நேசராய்
எந்தன் நலல மேய்ப்பன் தேடிவந்ததால்
பொல்லா மரண இருளின் பள்ளத்தாக்கிலும்
அவர் கோலும் தடியும் என்னை தேற்றுமே. —இராஜாதி

4. அபிஷேகத்தின் தைலத்தினுல்
எந்தன் பாத்திரத்தை நிரப்பினதால்
எந்தன் தலைதனை உயத்திடுவேன்
பொல்லா சத்துருவும் நடுங்கிடுவான். —இராஜாதி

5. எந்தன் ஜீவனுள்ள நாட்களெல்லாம்
என்னை நன்மை கிருபையும் தொடரும்
எந்தன் கர்த்தர் வீட்டில் நேர்த்தியாகவே
இளைப்பாறிடுவேன் நலமாகவே. —இராஜாதி

## 20

குருதி வடியுதே கல்வாரி மலையிலே
குற்றமற்ற இயேசுவின் குத்துண்ட விலாவிலே.

1. ஈட்டியும் பாய்ந்ததினுல்
வடியும் இரத்தமதாம்
என்னுள்ளம் நடுங்குதே
என் நேசர் துடிப்பதால். —குருதி

2. பாய்ந்தோடும் இரத்தத்தினுல்
பாவங்கள் கரைந்ததால்
பாவியின் கண்களிலே
காயங்கள் தென்படுதே. —குருதி

3. வறண்ட நாவினுலே
வருந்தி அழைக்கின்ருர்
தொனிக்கும் தேவ சத்தம்
செவியில் பாய்ந்திடுதே. —குருதி

4. பாய்ந்தோடும் இரத்தமதில்
பாதையும் தென்படுதே
பாவியின் பாதங்களும்
பாதையை தொடருதே. —குருதி

5. பொற்பரனேசு நாதா
உம்பாதம் பற்றிடவே
மோதிய பெலனில்லை
பாவியின் நெஞ்சினிலே. —குருதி

## 21

எந்தன் இயேசு வசனம் தந்தார்
எந்தன் நாவினுல் கூறிடவே
எந்தன் ஜீவன் உள்ள வரையும்
எந்தன் இயேசுவை கூறிடுவேன்.

1. பனித்துளிப்போல் வசனங்களும்
ஆவிமழைப் போல் வார்த்தைகளும்
இளம்பயிர்மேல் பொழிவதுபோல்
கர்த்தர் வார்த்தைகள் இறங்கிடுமே. —எந்தன்

2. இருகருக்குள்ள பட்டயமே
இருகரங்களும் சுமந்திடுமே
இருள்நிறைந்த பூமியிலே
இருபுறமும் பாய்ந்திடுமே. —எந்தன்

3. இன்னல் நிறைந்த வாழ்வினையே
இன்பமாகவே கடந்திடுவேன்
எந்தன் இறுதி மூச்சுவரை
எந்தன் இயேசுவை கூறிடுவேன். —எந்தன்

4. பாரம் நிறைந்த நெஞ்சினிலே
பரன் பாடுகள் ஏற்றுக்கொள்வேன்
பரன் பாதங்கள் அடைந்திடுவேன்
எந்தன் பாரங்கள் நீங்கிடுமே. —எந்தன்

5. அதிகாலை என் கால்களுமே
கருத்தாய் அது முடங்கிடுமே
எந்தன் வேண்டுதல் கேட்டிடுவார்
என்னை சாட்சியாய் நிருத்திடுவார். —எந்தன்

## 22

தூக்கி சுமக்கும் தோளினிலே சிலுவை சுமந்ததேன்?
என்னை தேடிவந்ததேன்? என்னை நாடி வந்ததேன்?

1. பாவபாரம் என்னில் நீங்க
பரனே வந்ததேன்
என்னை மீட்க வந்ததேன்
கறை நீக்க வந்ததேன்
வினை தீர்க்க வந்ததேன். —தூக்கி

2. காயம் ஏற்ற கரங்களாலே
காக்க வந்ததேன்
என்னை மாற்ற வந்ததேன்
என்னை ஆற்ற வந்ததேன்
என்னை தேற்ற வந்ததேன் —தூக்கி

3. சிந்தும் இரத்தம் இடை விடாமல்
என்னை அழைப்பதேன்
என்னை கழுவி வந்ததேன்
என்னை தழுவி நிற்பதேன்
என்னை தாங்கி வந்ததேன். —தூக்கி

4. விண்ணைபார்த்த உந்தன் கண்கள்
என்னை பார்ப்பதேன்
உந்தன் சிரமும் சாய்ந்ததேன்
உந்தன் கரங்கள் தளர்ந்ததேன்
காரிருளும் சூழ்ந்ததேன். —தூக்கி

5. ஐயா உந்தன் அன்புக்கிடாய்
என்ன செய்குவேன்
உம்மை என்றும் பாடுவேன்
உம்மை எங்கும் கூறுவேன்
உம்மை என்றும் போற்றுவேன். —தூக்கி

## 23

இயேசுவின் நாமம் மேலான நாமம்
இணையில்லா நாமம் இயேசுவின் நாமம்.

1. காலனும் கேட்டால் கலங்கிடும் நாமம்
கணமதில் சுகமே தந்திடும் நாமம்
கண்ணீரை மாற்றி கனிவோடு காக்கும்
கர்த்தரின் நாமம் மேலான நாமம். —இயேசு

2. தன்னிகரில்லா தேவனின் நாமம்
தண்ணீரும் இரசமாய் மாற்றிடும் நாமம்
திசைதோறும் பாடும் இயேசுவின் நாமம்
தெவிட்டாத இன்பம் தந்திடும் நாமம். —இயேசு

3. மலை போன்ற துன்பம் மாற்றிடும் நாமம்
அலை போன்ற உள்ளம் அடங்கிடும் நாமம்
ஆறுதல் என்றும் தந்திடும் நாமம்
ஆனந்த கீதம் பாடிடும் நாமம். —இயேசு

4. விண்ணவர் போற்றும் மேலான நாமம்
மண்ணவர் பாடும் உன்னத நாமம்

இராஜாதி இராஜன் தேவாதி தேவன்
இரட்சகர் நாமம் இயேசுவின் நாமம். —இயேசு

5. பாரினில் எங்கும் பாடிடும் நாமம்
பாவியை மீட்ட இயேசுவின் நாமம்
பாவியாம் என்னை மீட்ட நல் நாமம்
பாடிட என்றும் வைத்த நல் நாமம். —இயேசு

## 24

உன் தேவனை சந்திக்க ஆயத்தமா ?
இந்த வேளையில் ஆயத்தமா ?
அந்த காலமும் நேரமும் நெருங்கினதாலே
நண்பனே ஆயத்தமா ? நீ என்றும் ஆயத்தமா ?
உன் வீடும் ஆயத்தமா ? உன் இனமும் ஆயத்தமா ?
திருச்சபையும் ஆயத்தமா ?

1. பரலோகத்தின் தேவன் இராஜாதி இராஜன்
விரைவினில் வந்திடுவார்
உன்னை கூட்டியே சேர்த்தே மகிழ்ந்திட என்றும்
மன்னவன் வந்திடுவார். —என் நண்பனே

2. தூதரின் தொனியும் வானத்தில் தொனிக்கும்
வேளையும் நெருங்கிடுதே
பரமனின் சேனை பாடிடும் பாடல்
பரவசம் அளித்திடுமே. —என் நண்பனே

3. ஆதவன் உதிக்கும் திசையதை கண்டால்
மகிமையும் தென்படுமே
ஆயத்தம் அடைத்தோர் அவரோடு சேர்ந்து
விண்ணிலே பறந்திடுவார். —என் நண்பனே

4. விண்ணவர் சத்தம் விண்ணிலே தொனிக்கும்
விரைவாய் பறந்திடுவோம்
மறுரூபமடைந்தே மகிழ்ந்திட என்றும்
ஆயத்தம் அடைந்திடுவோம். —என் நண்பனே

## 25

பேரின்ப நதியே புகலிடம் தரவே
பாய்ந்தோடி வரவேண்டுமே
கரை புரண்டோடும் கறை நீக்கும் நதியே
இவ்வேளை வரவேண்டுமே.

சங் 36:8

1. கலைமானும் தண்ணீரை தேடும்
கண்டாலே தன் தாகம் தீரும்
என் தாகம் தீர்க்கும் கல்வாரி நதியே
இவ்வேளை வரவேண்டுமே. —பேரின்ப

2. யோர்தானின் தண்ணீரில் காணும்
நேசரின் முன்னடையாளம்
மறுஜென்ம முழுக்கரம் மறுரூபமாக
இவ்வேளை வரவேண்டுமே. —பேரின்ப

3. எலியாவின் வேண்டுதல் கேட்டாய்
எரிகின்ற அக்கினி தந்தாய்
என் நாவும் இன்றே அனலாக மாற
இவ்வேளை வரவேண்டுமே. —பேரின்ப

4. சிலுவையின் உபதேசம் கேட்டால்
சாத்தானின் உள்ளம் நடுங்கும்
நீர் தந்த வார்த்தை அக்கினிமயமாய்
இவ்வேளை வரவேண்டுமே. —பேரின்ப

5. பன்னிருகனி காணும் காலம்
பரனேசு வருகின்ற நேரம்
என் கண்கள் காணும் கல்வாரி நதியே
இவ்வேளை வரவேண்டுமே. —பேரின்ப

## 26

இராஜாதி இராஜன் தேவாதி தேவன்
மானிடனாக வந்துதித்தார்
காயங்கள் ஏற்றார் சிலுவையின் மீதில்
கல்வாரி அன்பை என் சொல்லுவேன்.

1. கந்தையின் கோலம் விந்தையில் ஏற்று
நிந்தையை நீக்க எந்தையே வந்தாய்
விந்தைக்கு வந்தாய் உறைவிடமானாய்
கல்வாரி அன்பை என் சொல்லுவேன. —இராஜாதி

2. மந்தையை மேய்க்கும் நல்மேய்ப்பனாக
மந்தையின் மேய்ப்பன் விந்தைக்கு வந்தார்
மந்தையை மீட்க தன்னையே கொடுத்தார்
கல்வாரி அன்பை என் சொல்லுவேன். —இராஜாதி

3. கண்ணீரை காணும் கர்த்தரின் கண்கள்
கனிவோடு நோக்கி என்னை அணைக்கும்
கண்ணிமைபோல எந்நாளும் காக்கும்
கல்வாரி அன்பை என் சொல்லுவேன். —இராஜாதி

4. வாரினால் ஏற்ற வாதையை கண்டேன்
இரத்தம் வடியும் காயங்கள் கண்டேன்
நெஞ்சில் நிறைந்ததாய் என் சொந்தமானாய்
ஐயா உன் அன்பை நான் பாடுவேன். —இராஜாதி

5. பாவியாம் என்னை மீட்கவே வந்தாய்
பாரசிலுவை தோளில் சுமந்தாய்
பாரினில் வந்தாய் பாடுகள் ஏற்றாய்
ஐயா உன் அன்பை என் சொல்லுவேன் —இராஜாதி

## 27

இந்த ஸ்தலத்தில் செய்யப்படும் ஜெபமே
தூப வர்க்கமாய் மாறிடுமே
கர்த்தர் கண்களும் கண்டிடுமே
அவர் செவிகளில் பாய்ந்திடுமே.

அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா.

1. அதிகாலையில் தேடுங்கள் என்றார்
என்றும் வாக்கு மாறாதவரே
அவர் வல்லமை பூமியில் விளங்கும்
தேவ மகிமையும் தென்படுமே. —இந்த

2 இந்த பூமியில் ஒருமனமாக
தேவ சமூகத்தை தேடுவதால்
அந்த காரமும் பூமியில் நீங்கும்
அவர் அதிசய நாமம் விளங்கும். —இந்த

3. இடைவிடாமல் ஜெபித்திடும் ஜெபமே
இன்னல் இருளையும் நீக்கிடுமே
அவர் ஸ்தலமாய் இருதயம் மாறும்
எந்தன் ஆத்துமா உறவாடும். —இந்த

4. நற்செய்தியாம் சுவிசேஷம் கூற
திசை நான்கிலும் பறந்தோட
ஆவி அனலாம் மாறிடவேண்டும்
அவர் நாமத்தை கூறிடவேண்டும். —இந்த

5. சமாதானத்தை கூறிடும் கால்கள்
ஜீவபாதையில் நடை போடும்
எந்தன் நாவும் சங்கீதம் பாடும்
துதிபாடலை ஏறெடுக்கும். —இந்த

## 28

நேசரை பாடிட இந்த வேளை வந்தது
கண்ணீரை துடைத்தார் எந்தன் கவலை தீர்ந்தது.

1. பள்ளத்தாக்கில் காணும் லீலீ
லீபனோனின் வாசனையாம்
முள்ளில் காணும் ரோஜா மலராம்
அவர் சாரோனின் ரோஜாவாம். —நேசரை

2. துள்ளி ஓடும் வெளி மான் போல்
மலைமேட்டினில் வருவார்
முகம் மலர்ந்து கனிவோடு
எந்தன் நேசர் வருகின்றார். —நேசரை

3. தென்றல் வீசும் வாடை காற்றும்
தெவிட்டாத தெளிதேனும்
கனிநிறைந்த தோட்டம் அவரே
எந்தன் கன்மலேயவரே. —நேசரை

4. ஜீவத்தண்ணீர் நிறைந்த துறவாம்
இரு கரையும் நற்கனியாம்
ஜீவ ஒளியாம் ஜீவ நதியாம்
எந்தன் தாகம் தீர்ப்பவராம். —நேசரை

5. கல்வாரி மலேயில் ஓடும்
கறை நீக்கும் செந்நீராம்
கரம் நீட்டி கண்ணீர் துடைத்தார்
எந்தன் கவலேயை தீர்த்தார். —நேசரை

## 29

பாவியை மீட்கவே தேடியே வந்ததால்
பாரினில் உம்மை பாடுவேன். —ஏசையா

1. பாவத்தின் இருள் என்னே மூடி மறைத்ததால்
பாதையை நான் மறந்தேன் ஏசையா
பாவத்தில் நான் வளர்ந்தேன்
காரிருள் நீக்கினுய் காலனே நசுக்கினுய்
பாரினில் உம்மை பாடுவேன். —ஏசையா

2. விந்தையில் வந்திட
சிந்தை நீர் வைத்ததால்
நிந்தையும் நீங்கினதே எந்தன்
சிந்தையும் மாறினதே
மந்தையை மீட்டு தம் சிந்தையை தந்ததால்
எந்தையே உம்மை பாடுவேன். —ஏசையா

3. இயேசுவே உம்மையல்லால்
நேசர் ஒருவரில்லே
பாரினில் பாடிடுவேன்—என்றும்
இயேசு கூறிடுவேன்
ஜீவனின் நாளெல்லாம் தேவனே பாடிட
உள்ளமும் பொங்கிடுதே. —ஏசையா

## 30

இன்ப நாமமே இயேசு நாமம்
இகமீதினில் போற்றும் நாமம்
இன்னல் இருளேயும் நீக்கும் நாமம்
இன்ப இயேசுவின் நல்ல நாமம்.

## 31

புது ஆண்டில் புதுஜீவன் புதுபெலனே எனக்கீந்தார்
பொன்னுளாம் இந்நாளில் நான் பாடுவேன்

என் இயேசுவை என் நேசரை
எந்நாளும் புதுபாட்டினுல் நான் பாடுவேன்.

1. அவர் செய்த நன்மைகள் ஏராளமே
அவர் நாமம் போற்றுவேன் இந்நேரமே
அன்பரின் நேசம் யார் சொல்ல ஆகும்
அத்தனே பெரிதென்றே பாடிடுவேன். —புது

2. என்னேடு எந்நாளும் அவரிருந்தார்
என் ஆவி ஆத்துமா தன்னே காத்தார்
இம்மானுவேலாம் என் இயேசுராஜன்
யெகோவா தேவனே பாடிடுவேன். —புது

3. எண்ணில்லா நன்மைகள் பெற்றதினுல்
என் நாவும் இயேசுவை பாடிடுதே
என் ஜீவன் மீட்க தன் ஜீவன தந்தார்
ஜீவாதிபதியை பாடிடுவேன். —புது

4. உன்னதர் ஊழியம் செய்திடவே
நல்கிய நன்மைகள் ஏராளமே
அவர் தந்த நாவும் நாமமே கூறும்
அளவற்ற கிருபையை பாடிடுவேன். —புது

## 32

இயேசுவே பாவ புலியாக
தன்னே கொடுத்தார் பாரினிலே

1. விண்ணேத் துறந்தே மண்ணில் வந்தார்
என்னே மீட்க சிந்தை கொண்டார்
தன்னே கொடுத்தார் நீசனுக்காய்
என்னே கொடுத்தேன் இயேசுவுக்காய். —இயேசு

2. முள்முடி கிரீடம் சூட்டிடவே.
வாரினுல் வாதைகள் ஏற்றிடவே
ஐயா என் பாவம் போக்கிடவே
வந்தாய் விந்தைக்கு என் இயேசுவே. —இயேசு

3. ஆணிகள் பாய்ந்திட்ட பாதங்களே
அடியான் கைகளால் பற்றிக்கொண்டே
அங்கே என் தலே சாய்த்திடவே
ஐயா எண்ணுள்ளம் வாஞ்சிக்குதே. —இயேசு

4. இரத்தமும் நீரும் பாய்ந்தோடிட
விலாவில் ஈட்டியும் பாய்ந்ததேன்
ஐயா நின்தலை சாய்ந்ததும் ஏன்
கண்ணீரும் செந்நீரில் சேர்ந்ததுமேன். —இயேசு

5. தன்னுதிரம் தன்னை தந்ததினுல்
தாயன்பை காட்டிலும் பெரியதாம்
இவ்வன்புக்கீடாய் என் செய்குவேன்
இயேசுவின் பின்னே சென்றிடுவேன். —இயேசு

## 33

நான் பாவியான மனிதன்
நான் பாவசேற்றினில் வாழ்ந்தேன்
என் இயேசு என்னை கண்டார்
செந்நீரில் கழுவி மீட்டார்.

1. உணர்வில்லா மிருகமாய் அலைந்தேன்
உளையான சேற்றினில் இருந்தேன்
உள்ளம் கலங்கி சோர்ந்தேன்
என் இயேசுவினிடமாய் சாய்ந்தேன். —நான் பாவி

2. நினைவெல்லாம் பாவ கறைகள்
நினைத்தேங்கும் உலக சிற்றின்பம்
என்னை மறந்தே வாழ்ந்தேன்
என் நேசரை சிலுவையில் அறைந்தேன். —நான் பாவி

3. கறை காணும் கர்த்தரின் கண்கள்
கனிவோடு நோக்கினதென்னை
கண்கள் கலங்கி நின்றேன்
கரம் நீட்டிட மார்பினில் சாய்ந்தேன். —நான் பாவி

4. மனமெல்லாம் மறுருப மடைந்தேன்
மனதார செய்தியை சொல்வேன்
என்னை அணைக்கும் கரங்கள்
என்னை சாட்சியாய் நிறுத்திடும் கரங்கள். —நான் பாவி

## 34

காயப்பட்ட கரத்தினுல காயப்பட்ட கரத்தினுல்
காரும் எங்கள் இயேசையா
கண்ணின் மணிப்போல் காருமய்யா
கண்ணீரை துடையுமய்யா.

1. ஐந்து காயங்கள் ஏற்றுக்கொண்டீர்
பாவி எந்தன் பாவத்துக்காய்
ஐந்து கண்டத்தின் பாவத்துக்காய்
ஆண்டவா நீர் அறையுண்டீரே
குத்துண்டீரே குத்துண்டீரே
பாவி எனக்காய் குத்துண்டீரே. —காயப்பட்ட

2. சிலுவை மீதினில் ஏழுவார்த்தை
பாவி எனக்காய் மொழிந்தீரய்யா
ஏழை நானும் கைக்கொள்ளவே
இயேசையாவே நீர் இரங்குமய்யா. —குத்துண்டீரே

3. பிதாவே நீர் இவர்களுக்காய்
மன்னியும் என்றுரைத்தீரே
செய்வதின்ன தென்றறியாமல்
செய்கிருர்கள் என்றுரைத்தீரே. —குத்துண்டீரே

4. கள்ளனுக்காய் இரங்கினீரே
இன்று பரதீசில் இருப்பாய் என்றே
பாவி எனக்கும் இரங்குமய்யா
பரதீசினிலிடம் வேண்டுமய்யா. —குத்துண்டீரே

5. ஸ்திரியை பார்த்ததோ உன் மகன்
என்று நீர் உரைத்தீரே
சீஷனைப் பார்த்து அதோ உன்தாய்
என்று நீர் உறைத்தீரே. —குத்துண்டீரே

6. என் தேவனே என் தேவனே
ஏன் என்னை கைவிட்டீரென்றே
பிதாவின் சித்தம் நிறைவேற்றிட
பொற்பரனே நீர் துடித்தீரய்யா. —குத்துண்டீரே

7. கசப்பு நிறைந்த காடியை
கர்த்தாவே உமக்கு கொடுத்தாரே
தாகம் தீர்க்க வந்தவரே
தாகத்தால் துவண்டு துடித்தீரே. —குத்துண்டீரே

8. எந்தையே என் இயேசையாவே
எனக்காய் குருசில் தொங்கினீரே
இயேசைய்யா என் இயேசைய்யாவே
எல்லாம் முடிந்த தென்றுரைத்தீரே. —குத்துண்டீரே

9. பிதாவே உமது கைகளிலே
என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்றே
மகா சத்தமாய் கூப்பிட்டீரே
ஜீவன் எனக்காய் விட்டீரய்யா. —குத்துண்டீரே

10. சிலுவை சுமந்த என் இயேசுவே
சிந்தின இரத்தத்தால் காரும்மய்யா
உமது சித்தம் நிறைவேற்றிட
என்னை உம் கரத்தில் ஒப்புவித்தேன்.
என் இயேசுவே என் நேசரே
என்னை உம் கரத்தில் ஒப்புவித்தேன்.

## 35

தேற்றரவாளனே தேவனின் ஆவியே
கிருபையாகவே இறங்கி வாருமே.

1. சடுதியாகவே நிறப்பும் எம்மையே
கிருபையின் தேவனே இறங்கிவாருமே.

2. பரத்தினிலிருந்தே பார்க்கும் எம்மையே
பரிசுத்த ஆவியே இறங்கி வாருமே.

3. உமது சமூகமே இன்பமானதே
உள்ளம் மகிழவே இறங்கி வாருமே.

4. காலனும் நடுங்க காரிருள் நீங்க
யெகோவா தேவனே இறங்கி வாருமே.

5. ஆமென் அல்லேலூயா ஆமென் அல்லேலூயா
ஆமென் அல்லேலூயா ஆமென் அல்லேலூயா.

## 36

இரத்தம் வடியும் காயங்கள் கண்டேன்
என் பாவம் நீங்கினதே
ஈனகுருசில் தொங்கி மரித்தாய்
என் பாவம் போக்கிடவே.

1. அன்னாவும் காய்பாவும் கூறும்
ஆலோசனை கேட்கும் நேரம்
அநியாய சாட்சிகள் கூடி
கூறின வார்த்தைகள் கேட்டாய். —இரத்தம்

2. பிலாத்து தேசாதிபதியாம்
பிதற்றும் வார்த்தைகள் கேட்டான்
தண்ணீரில் கைகளை கழுவி
நேசரை ஒப்புக்கொடுத்தான். —இரத்தம்

3. எண்ணற்ற நன்மைகள் கேட்ட
ஏரோது கண்களும் காண
எந்தையே ஏன் அங்கு சென்றாய்
என் பாவம் போக்கவே நின்றாய். —இரத்தம்

4. பொல்லாத போர்வீரர் கூட்டம்
பரியாச வார்த்தைகள் கூறி
முள்முடி கிரீடமாய் சூட்டி
சிலுவையில் ஏற்றியதென்ன. —இரத்தம்

## 37

என் தேவனே என் தேவனே
என்னை காணும் என் ஜீவனே
உமது சித்தமே நிறைவேற
என்னை நடத்தும் இந்நேரமே.

1. பாவி என்றே தள்ளிடாமல்
பாத்திரமாக மாற்றிடுமே
மீட்டுக்கொண்ட உம் இரத்தமே
பேசவேண்டும் இந்நேரமே. —என் தேவனே

2. காயமேற்ற உம் கரமே
காக்கவேண்டும் இந்நேரமே
கிருபையாக இரங்கியே
கர்த்தாவே நீர் என்னை நடத்துமே. —என் தேவனே

3. ஜீவன் எனக்கு தந்தவரே
ஜீவனை உமக்காய் கொடுப்பேனே
சேதம் பலவாய் நேரிட்டாலும்
வேதவசனம் உரைப்பேனே. —என் தேவனே

4. தேற்றிடும் கரத்தால் காப்பவரே
தேற்றரவாளனை அனுப்புமே
மாற்றும் என்னை இந்நேரமே
போற்றும் நாவினைத் தாருமே. —என் தேவனே

5. அக்கினி மதிலாய் நிற்பவரே
அனுப்பும் ஐயா எங்களையே
ஆவியின் அனலை பொழிந்தெம்மை
ஆக்கவேண்டும் பாத்திரமாய். —என் தேவனே

## 38

எழும்பி பிரகாசி உன் ஒளி வந்தது
தேவ மகிமையே உன்மேல் உதித்தது.

1. பூமியை இருளும் நிரப்பி நின்றிடும்
காரிருள் ஜனத்தை மூடிமறைத்திடும்
தேவனின் மகிமை உன்மேல் உதிப்பதால்
தேவனின் சமூகம் உன்னில் தென்படும். —எழும்பி

2. வெளிச்சத்தில் நடக்கும் உந்தன் வழிதன்னில்
ஜாதிகள் பலவும் விரைந்து வந்திடும்
கூடிமகிழவே தேடிவருவதால்
தேவனின் மகிமை உன்னில் தென்படும். —எழும்பி

3. உந்தன் கண்களால் உலகை நோக்கிபார்
உள்ளம் மகிழவே வருவார் உன்னிடம்
உந்தன் அருகினில் அமர்ந்து மகிழவே
உன்னதர் மகிமை உன்னில் தென்படும் —எழும்பி

4. திரண்ட கூட்டமே திரண்டு வந்திடும்
திசைகள் நான்குமே கூடி நின்றிடும்
பலத்த சேனையாய் மாறி நிற்பதால்
பரமனின் மகிமை உன்னில் தென்படும். —எழும்பி

5. சூரியன் வெளியச்சம் உனக்குத் தேவையோ
சந்திரன் வெளிச்சம் உன்னில் காணுமோ
தேவனின் மகிமை சூழ்ந்து நிற்பதால்
தேவ சமூகமே உனக்கு போதுமே. —எழும்பி

## 39

உயிர்த்தெழுந்தார் இயேசு உயிர்த்தெழுந்தார்
ஜெயித்தெழுந்தார் இயேசு ஜெயித்தெழுந்தார்
காலனும் கலங்கிட காவலர் நடுங்கிட
உயிர்த்தெழுந்தார் இயேசு ஜெயித்தெழுந்தார்.
—அல்லேலூயா

1. வாரத்தின் முதலாம் நாளினிலே
வானவர் தூதரும் வந்தனரே
வாசலில் இருந்த கல்லினையே
புரட்டித்தள்ளி அமர்ந்தனரே. —அல்லேலூயா

2. மூடியக் கல்லறை திறந்ததினல்
காவலர் நெஞ்சம் கலங்கினதே
ஜெயித்த கிறிஸ்து ஜெயமாகவே
ஜெயித்தேன் என்று எழுந்தாரே. —அல்லேலூயா

3. திறந்தக் கல்லறை கண்டதுமே
துவண்டு துடித்து அழுதனரே
தூதனை கண்டு கேட்டதினல்
கர்த்தர் எழுந்தார் என்றுனே. —அல்லேலூயா

4. நடுக்கமும் திகிலும் பிடித்ததினல்
நடந்ததை சொல்ல போனளே
கலங்கிய கண்களை கண்டதினல்
மரியாளை கர்த்தர் அழைத்தாரே. —அல்லேலூயா

5. சாத்தானின் தலையை நசுக்கினுரே
தன்னிகரில்லாத தேவனே
தலைகளை உயர்த்தி பாடிடுவோம்
தாரணி மீதினில் கூறிடுவோம்.
—அல்லேலூயா

## 40

பாவி என்னை மீட்கவே பாரினில் என் இயேசுவே
பார சிலுவையை தூக்கி சுமந்தீரே கல்வாரி மேட்டினிலே

1. வாரினல் அடிக்கவே வாதையால் துடித்தீரே
வானம் நடுங்கிட பூமி அதிர்ந்திட குருசில் தொங்கினீரே.
—பாவி

2. கள்ளரின் மத்தியிலே கள்ளன்போல் தொங்கினீரே
ஆணிகள் பாய்ந்திட அன்று மரித்தீரே கல்வாரி மேட்டினிலே.
—பாவி

3. தாகத்தால் துடித்தீரே தாகமோ தீரவில்லை
ஆத்துமா மீட்கவே அந்தோ மரித்தீரே அன்பரே இயேசுநாதா.
—பாவி

4. இரத்தம் வடிந்திடுதே இரட்சகர் விலாவிவே
இத்தரை மீதினில் எத்தனை பாடுகள் எந்தையே இயேசுநாதா.
—பாவி

5. உரத்த சத்தமிட்ட உன்னதா அழைத்தீரே
ஜீவனை மீட்கவே ஜீவனை கொடுத்தீர் கல்வாரி மேட்டினிலே.
—பாவி

## 41

இயேசுவே எந்தன் நேசரேசுவே
பாவி நான் உம்மை என்றும் பாடுவேன்.

1. இளைப்பாறுகின்ற ஸ்தலமே
எங்கள் இயேசு எமக்கே அளித்தார்
ஆணிகள் பாய்ந்த பாதம் அதுவே எனக்கு போதும்
இனிதான இன்ப சுகமே பரலோக ராஜ்யமே. —இயேசுவே

2. கள்ளன் உம்மை நோக்கி பார்த்தே
கருத்தாக வேண்டிக்கொண்டான்
கர்த்தாவே நீர் இறங்கி கனிவான வார்த்தை மொழிந்தீர்
அந்த நேர்த்தியான பங்கை எந்தன் இதயம் நாடுதே.
—இயேசுவே

3. உம்மை நோக்கி பார்க்கும் முகமே
பிரகாசம் அடையும் இடமே
தேவாதிதேவன் சமுகம் மாமகிமை நிறைந்த லோகம்
மனமகிழ்ச்சியான கீதம் நான் என்றும் பாடுவேன்.
—இயேசுவே

4. நேர்த்தியான பங்கை அடைவேன்
சிறப்பான இடமும் அதுவே
கல்வாரி சிலுவை வழியாய் பரலோக ராஜ்யம் அடைவேன்
இணையில்லா இன்ப சுகமே எந்தன் இயேசு நாமமே.
—இயேசுவே

## 42

இயேசு வருகிறார் இயேசு வருகிறார்
மத்திய ஆகாய மீதிலே இயேசு வருகிறார்.

1. அந்த நாளும் நெருங்கிடுதே
அந்த நேரம் நெருங்கிடுதே
ஆயத்தமுள்ளோர் அன்பரோடு சேர்ந்து
என்றென்றும் வாழ்ந்திடுவார்.
—இயேசு

2. ஆரவார தொனி கேட்குமே
ஆண்டவரின் சத்தம் கேட்குமே
ஆயிரமாயிரம் தூதர்களோடு
அன்பரேசு வந்திடுவார்.
—இயேசு

3. தேவ தூதரும் அறியார்
தேவ மைந்தனும் அறியார்
காலங்கள் யாவும் தேவனே அறிவார்
வேறு ஒருவனும் அறியான்.
—இயேசு

4. மன்னன் இயேசு வரும் வேளையில்
மறுரூபம் நானடைவேன்
ஆயிரமாயிரம் ஆண்டுகளாக
இயேசுவோடே வாழ்ந்திடுவேன்.
—இயேசு